தப்படும் இரண்டு சிறிய கம்பிகள் இல்லாமல் இரு பலர் கலந்து கொண்டனர்.

காஞ்சி மாமுனிவர் மையம் பிரெஞ்சு நிறுவனம் ஒப்பந்தம்



புதுச்சேரியில் காஞ்சி மாமுனிவர் முதுகலை பட்டப்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், பாண்டிச்சேரி பிரெஞ்சு நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

புதுச்சேரி, நவ. 2– புதுச்சேரியில்காஞ்சி மாமுனிவர் முதுகலை பட்டப்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், பாண்டிச்சேரி பிரெஞ்சு நிறுவனத்திற்கும் இடையேபுரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

அர்த்தமுள்ள கல்வி கூட்டாண்மையை உருவாக்கும் நோக்கில் நடந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் சசிகாந்த தாஸ், பிரெஞ்சு நிறுவனத்தின் இயக்குநர் ரெனோ கோல்சன் ஆகியோர் கையேழுத்திட்டனர்.

இதன் மூலம், கூட்டு ஆராய்ச்சி, கல்வி பரிமாற்றம், கருத்தரங்குகள், பயிலரங்குகள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பங்கேற்பு, மற்றும் பல்துறை சார்ந்த முன்னெடுப்புகளுக்கு புதிய வாய்ப்புகள் உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மனிதநேயம், சமூக அறிவியல், சுற்றுச்சூழல் ஆய்வுகள், கலாசாரம் மற்றும் அறிவியல் விசாரணை ஆகிய துறைகள் சந்திக்கும் புதிய ஆராய்ச்சிப் புலங்களை ஆராயவும் வழிவகுக்கும்.

தெற்காசிய கலாசாரம், சுற்றுச்சூழல் மற்றும் சமூகம் குறித்த ஆய்வுகளுக்குப் புகழ்பெற்ற பாண்டிச்சேரி பிரெஞ்சு நிறுவனத்துடனான இந்தத் தொடர்பு, ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆராய்ச்சித் திறன், கல்விசார் செயல்பாடுகளை மேம்படுத்த உதவும்.

கல்வி ஒத்துழைப்பு, பல்துறை ஆராய்ச்சி மற்றும் நிறுவனங்களுக்கு இடையிலான பிணைப்பை வலுப்படுத்துவதில் இது ஒரு முக்கிய மைல்கல்லாகும்.

நிகழ்வை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பிரிவின் ஒருங்கிணைப்பாளர் மேரி ஜோசபின் அருணா ஒருங்கிணைத்தார்.

முதியவர் மாயம்